பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

01 08 2026 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.
- சமூக வலைதள நிறுவனமான மெட்டாவின் உலகளாவிய குழுவை மத்திய அரசு நேரில் அழைத்து விசாரணை நடத்தவுள்ளது.
- மேற்காசியாவில் எந்தச் சூழ்நிலையிலும் வணிகக் கப்பல்கள் மற்றும் மாலுமிகள் மீதான தாக்குதல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தியுள்ளது.
- பேட்ரியாட் இடைமறிப்பு ஏவுகணைகளை யுக்ரைன் தயாரிக்க அனுமதிப்பது தொடர்பாக இன்னும் எந்த முடிவும் எடுக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
- காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஜூடோ மகளிர் பிரிவில் இந்தியாவின் அஸ்மிதா தே, ஆடவர் பிரிவில் ஹர்ஷ் சிங் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஆந்திரப்பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைக்கிறார்.

முதற்கட்டமாக ஆந்திர மாநிலம், விஜயநகரம் மாவட்டம் போகபுரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய அல்லூரி சீதாராம ராஜு சர்வதேச விமான நிலையத்தை அவர் திறந்து வைக்கிறார்.

அரசு தனியார் பங்களிப்பு முறையில் 5 ஆயிரத்து 640 கோடி ரூபாய் செலவில் இந்த பசுமை விமான நிலையம் கட்டப்பட்டுள்ளது.

மேலும், விசாகப்பட்டினத்தில் இந்தியாவின் தேசிய செமிகண்டக்டர் இயக்கத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட ஆந்திராவின் முதல் செமிக்கண்டக்டர் திட்டத்திற்கு அவர் அடிக்கல் நாட்டுகிறார்.

இது தவிர, போாகபுரத்தில் தோராயமாக 17 ஆயிரத்து 900 கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தொடங்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் அவர் சிறப்புரையாற்றுகிறார்.

ஆந்திரப்பிரதேசப் பயணத்தை நிறைவு செய்துகொள்ளும் பிரதமர், கர்நாடகா மாநிலம் மைசூருவுக்குச் செல்கிறார்.

அங்கு சுவாமி விவேகானந்தா கலாச்சார இளைஞர் மையத்தை திறந்து வைக்க உள்ளார்.

<<<<>>>>

சமூக வலைதள நிறுவனமான மெட்டாவின் உலகளாவிய குழுவை மத்திய அரசு நேரில் அழைத்து விசாரணை நடத்தவுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முகநூல் பதிவை அந்நிறுவனம் தற்காலிகமாகக் கட்டுப்படுத்திய விவகாரத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, நெறிமுறைச் சார்பு மற்றும் பொது அமைதியைப் பேணுவதில் நிறுவனத்தின் பங்கு போன்ற பல்வேறு முக்கியப் பிரச்சினைகள் குறித்து அவர்களிடம் கேள்வி எழுப்பப்படவுள்ளது.

அதிகாரப்பூர்வ தகவல்படி, மெட்டா நிறுவனத்தின் உலகளாவிய குழு அடுத்த வாரம் இந்தியா வருகைதரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசு அதிகாரிகளின் விசாரணைக்குப் பிறகு, இக்குழுவினர் நாடாளுமன்றக் குழு முன்பாகவும் ஆஜராகி விளக்கம் அளிக்கவுள்ளனர்.

வினாத்தாள் கசிவு விவகாரத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என உறுதியளித்து பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்ட காணொளிப் பதிவு முகநூலில் சுருக்கி வெளியிடப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம் மெட்டாவின் உயர் அதிகாரியை உடனடியாக அழைத்து விளக்கம் கேட்டிருந்தது.

இது ஒரு தொழில்நுட்பக் கோளாறு என்று கூறி மெட்டா நிறுவனம் மன்னிப்புக்கோரியிருந்தாலும், மத்திய அரசு அந்த விளக்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் நேற்று மாலை ஈரானிய வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சியைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.

அப்போது, மேற்காசியப் பகுதியில் தொடர்ந்து நிலவி வரும் பதற்றமான சூழ்நிலை குறித்தும், இந்தியாவின் ஆழ்ந்த கவலைகளையும் அவரிடம் தெரிவித்தாக சமூக வலைதளப்பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தொலைபேசி உரையாடலின் போது, எந்தச் சூழ்நிலையிலும் வணிகக் கப்பல்கள் மற்றும் மாலுமிகள் மீதான தாக்குதல்கள் தவிர்க்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

யார் இதுபோன்ற தாக்குதல்களை நடத்தினாலும் அதனை இந்தியா வன்மையாகக் கண்டிக்கிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், தற்போதைய நிலவரங்கள் மற்றும் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் குறித்த ஈரானின் நிலைப்பாடு தனக்கு விளக்கப்பட்டதாககவும், இந்தியா எப்போதுமே பேச்சுவார்த்தைக்கும் ராஜதந்திர வழிமுறைகளுக்கும் முழு ஆதரவு அளிக்கும் என்றும் திரு.ஜெய்சங்கர் தெரிவித்தார்.

<<<<>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-கஷ்மீரில் நடத்தப்படும் முறையற்ற தேர்தலை அப்பகுதி மக்கள் நிராகரித்திருப்பது, பாகிஸ்தானின் ஆளுமைக்கும், அதன் அடக்குமுறைகளுக்கும் எதிரான மக்களின் உணர்வு என்று இந்தியா தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால், பாகிஸ்தான் ஆக்கிரமிப்புப் பகுதியில் அமைதியான முறையில் போராடும் பொதுமக்களுக்கு எதிராக அந்நாட்டு நிர்வாகம் கடுமையான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளதாகக் குற்றம் சாட்டினார்.

இந்த கோரத் தாக்குதல்கள் மற்றும் ஒடுக்குமுறைகள் காரணமாக 40-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்ததாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அரசின் சட்டவிரோத கொலைகள் குறித்து சர்வதேச அமைப்புகள் மூலம் சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் கோரிக்கை விடுத்துள்ளார்.

<<<<>>>>

இந்தியா-இங்கிலாந்து உறவை புதிய உச்சத்திற்குக் கொண்டு செல்ல பிரதமர் திரு. நரேந்திர மோடியும், இங்கிலாந்து பிரதமர் திரு. Andy Burnham-மும் உறுதியேற்றுள்ளனர்.

இங்கிலாந்தின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ள திரு. Andy Burnham உடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று தொலைபேசியில் உரையாடியபோது தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தொழில்நுட்பம், புத்தாக்கம், பாதுகாப்பு, தூய்மை எரிசக்தி, கல்வி மற்றும் மக்களுக்கு இடையேயான உறவுகள் போன்ற பல்வேறு துறைகளில் இணைந்து பணியாற்ற இருவரும் உறுதியேற்றுள்ளதாக தனது சமூக வலைதளப் பக்கத்தில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா-இங்கிலாந்து விரிவான வர்த்தக உடன்படிக்கையை புதிய உச்சத்திற்குக் கொண்டு செல்ல இருவரும் ஒப்புக்கொண்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், வர்த்தகம், பொருளாதாரம், முதலீடு ஆகியவற்றில் வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவும் ஒப்புக்கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி மேலும் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

யுக்ரைன் பேட்ரியாட் இடைமறிப்பு ஏவுகணைகளைத் தயாரிக்க அனுமதிப்பது தொடர்பான திட்டங்களில், அமெரிக்கா எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியுள்ளது என்று அந்நாட்டு அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அதிபர் மாளிகையில் செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிய திரு. டோனல்ட் ட்ரம்ப், அமெரிக்க ராணுவத்தின் மிகவும் மேம்பட்ட வான் பாதுகாப்பு அமைப்புகளில் ஒன்றை யுக்ரைன் சொந்தமாகத் தயாரிக்க அனுமதிக்கப்படுமா என்பது குறித்து இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்.

ஆயுத உற்பத்தியை விரிவுபடுத்துவதைவிட போரை முடிவுக்குக் கொண்டுவருவதிலேயே தனது கவனம் உள்ளது என்று மீண்டும் குறிப்பிட்ட திரு. ட்ரம்ப், அமைதியை ஏற்படுத்துவதே முதன்மையான இலக்கு என்றும் வலியுறுத்தினார்.

இந்நிலையில் யுக்ரைன் நகரங்கள் மற்றும் முக்கியக் கட்டமைப்புகள் மீது ரஷ்யா தனது ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதால், கூடுதல் பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் இடைமறிப்பு ஏவுகணைகளை வழங்குமாறு யுக்ரைன் தொடர்ந்து நேட்டோ நாடுகளிடம் கோரிக்கை விடுத்து வருகிறது.

<<<<>>>>

ஆப்பிரிக்க நாடுகள் உட்பட 50 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்க விசா பெற, பிணையப் பத்திரம் செலுத்த வேண்டும் என்ற சோதனை ரீதியிலான திட்டத்தை அமெரிக்கா தற்போது நிரந்தரமாக்கியுள்ளது.

மேலும், இதற்கான கட்டணம் 20 ஆயிரம் டாலராக உயர்த்தப்பட்டுள்ளது.

முந்தைய சோதனை முறைத் திட்டத்தில் அதிகபட்ச பிணையத் தொகை 15 ஆயிரம் டாலராக இருந்தது.

அதிகாரிகளின் விருப்பத்தின் அடிப்படையில் குறைந்தபட்சத் தொகையாக 5 ஆயிரம் டாலர்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

ஆனால், புதிய இறுதி விதிமுறையின்படி அதிகபட்சத் தொகை 20 ஆயிரம் டாலராக உயர்த்தப்பட்டுள்ளதுடன், 5, ஆயிரம் டாலர் என்ற குறைந்தபட்சத் தொகை நீக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் ஜூடோ விளையாட்டில் மகளிர் பிரிவில் இந்தியாவின் அஸ்மிதா தே, ஆடவர் பிரிவில் ஹர்ஷ் சிங் ஆகியோர் தங்கப் பதக்கம் வென்றுள்ளனர்.

கிளாஸ்கோவில் நேற்று நடைபெற்ற போட்டிகளில் யாமினி மௌரியா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

டெக்கத்லான் பிரிவில் முதல் பதக்கம் வென்ற இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையை தேஜஸ்வின் ஷங்கர் படைத்துள்ளார். அவர் இப்போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்றார்.

மகளிர் குத்துச்சண்டை போட்டியில் 70 கிலே எடைபிரிவில் நடப்புச் சாம்பியனான ரோசி எக்லெஸை வீழ்த்தி, அருந்ததி சௌத்ரி வெற்றி பெற்றார்.

உலக சாம்பியன் ஜாஸ்மின் லம்போரியா, ஒலிம்பிக் பதக்கம் வென்ற லவ்லினா போர்கேன் மற்றும் வேறு ஏழு இந்திய வீராங்கனை, வீரர்களும் தங்களின் தங்கப் பதக்கச் சுற்றுப் போட்டிகளுக்கு முன்னேறியுள்ளனர்.

புல் பந்துப் போட்டியில் இந்தியாவின் ஆதிக்கம் தொடர்கிறது. இதில் ஆடவர் இரட்டையர் அணி தொடர்ந்து நான்காவது வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

ஈட்டி எறிதலில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கமும், யஷ்வீர் சிங் வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

இறுதிபோட்டியில் நீரஜ் சோப்ரா, 85 புள்ளி எட்டு மூன்று மீட்டர் தொலைவிற்கு ஈட்டி எறிந்து இந்தப் பதக்கத்தைக் கைப்பற்றினார்.

காமன்வெல்த் போட்டிகளில் முதல்முறையாக களமிறங்கிய 24 வயது யஷ்வீர் சிங், 85 புள்ளி நான்கு மீட்டர் தூரம் எறிந்து தன் சொந்த சாதனையை முறியடித்து பதக்கம் வென்றார்.

பதக்கப்பட்டியலில் இதுவரை இந்தியா 5 தங்கம், 12 வெள்ளி மற்றும் 6 வெண்கலம் என 23 பதக்கங்களை வென்றுள்ளது.

<<<<The End>>>>